1968 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

அதை விதிக் குழுவில் வைத்து, ஆராய்ந்து மாற்ற வேண்டும். இதற்கிடையில் பழைய விதியின்படியே பேரவையை நடத்த நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (தொடர்ந்து பேரவைத் தலைவர் தெலுங்கிலே பேசினார்.)

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசத் தொடங்கினார்.

5. நடைமுறைக் கேள்வி.

நூலகத்தில் பேரவை நடவடிக்கைக் குறிப்புச் சுவடு வைக்கப்படுதல்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று நடந்த சட்டசபை நிகழ்ச்சிகளிலே அன்றையதினம் எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு விநயகம் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை இருப்பதாகவும் அது உரிமைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டதாகவும் அன்றையதினம் தலைமை வகித்த தலைவர் அவர்கள் சொன்னார்கள். பிறகு, அதுபற்றிய விளக்கம் சொல்லுகின்ற நேரத்திலே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் "அனுப்ப வேண்டி நேரிடும்" என்றுதான் சொன்னார் என்று சொன்னார்கள். அப்பொழுது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆனால், இன்றையதினம் பத்திரிகையிலே அதுபற்றி வேறுவிதமாக எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்களின் மேல் உரிமைக் கமிட்டிக்கு அந்தப் பிரச்சினை சென்றிருப்பதாகப் பார்த்தோம். அதற்கான உரிய விளக்கத்தைப் பார்ப்பதற்காக, சபையின் நடவடிக்கைகளைப் பார்ப்பதற்காக, அந்தக் குறிப்புகளை லைப்ரெரியில் சென்று பார்த்தேன். ஓராண்டு காலமாக சபைக் குறிப்புகள் அங்கே வைக்கப்படவில்லை என்று அங்கே குறிப்பிட்ட பிறகு, அது கிடைக்கின்ற இடமாகிய ரிப்போர்ட்டிங் செக்ஷனுக்குச் சென்று பார்த்தேன். அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்பு அங்கும் கிடைக்காத காரணத்தால் இன்றையதினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மீது பிரச்சினை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட முன்பு லைப்ரெரியிலே நடவடிக்கைக் குறிப்புக்களை வைக்கிறேன் என்று சொன்ன உறுதிமொழி என்ன ஆயிற்று என்று கேட்கிறேன். அதுபற்றி நேற்றே நீங்கள் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லாத நேரத்திலே அதுபற்றிய சபாநாயகர் அவர்களுடைய விளக்கத்தை எதிர் பார்க்கிறேன், கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்ன என்பதை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்து நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த நூலகத்திலே—லைப்ரெரியிலே—சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளை வைத்தால்தான் எல்லோரும் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஏற்கெனவே இதைப்பற்றி கேட்டபொழுது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்புகளை லைப்ரெரியிலே வைப்பதாக பிஸினெஸ் அட்வைசரி கமிட்டியிலே வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் லைப்ரெரியிலே அந்த நடவடிக்கைகள் வைக்கப்படவில்லை. பாராளுமன்றத்திலே அந்த அந்த நாள் நடக்கும்படியான அன்றாடக் குறிப்புகளை வைத்தால்தான் அங்கத்தினர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று வைக்கப்படுகிறது. ஆகவே, இனிமேல் தயவுசெய்து இங்கும் வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் எங்களுடைய உரிமை கூட பாதிக்கப்படுகிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, அன்றன்று நடவடிக்கைகள் நூலகத்திலே கண்டிப்பாக வைக்கவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமையைப் பாதிப்பதாக இருந்தால், பாயிண்டு ஆஃப் ஆர்டரில் கொண்டுவர முடியாது. 83-வது விதியைப் பாருங்கள்.

A point of order should not be a point of privilege.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒழுங்குப் பிரச்னை என்ற அடிப்படையிலே கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே சொல்லியிருப்பது என்னவென்றால், திருத்தப்படாத குறிப்புகள் நூலகத்தில் வைக்கப்பட்டால் திருத்தப்படாதவைகளைப் பார்த்து, அதனால் பல கேள்விகள் வரக்கூடும். ஆகவே, திருத்திய பின் வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வைக்கப்படுவதில்லை. இதுவரையிலும் நூலகத்தில் வைக்கப்படுவதில்லை. அதற்கு என்ன சொல்கிறீர்கள். ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்னவென்று பார்க்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வைக்கிறதே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வைக்கிறதில்லை என்று சொன்னால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் நூலகத்திற்குச் சென்று பார்த்திருக்கிறேன். வைக்கப்படுவதில்லை, வைக்கப்படுவதில்லை, வைக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மூன்று தரம் வைக்கப்படுவதில்லை என்று சொன்னால், நான் நான்கு தரம் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன், நாளைக்குச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தெலுங்கில் பேசினார்.

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தெலுங்கில் பேசினார்.

4. பேரவை நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டிய மொழி—தொடர்ச்சி.

THIRU. T. MARTIN : Sir, I want a clarification from the hon. Member. . . .

MR. SPEAKER : **I have been saying in Tamil that what he says in Telugu is not part of the business of the House.**

நான் தெலுங்கில் பேசியதைக் கூட பேரவையின் நடவடிக்கையில் போடக்கூடாது. அப்படி பேரவையின் நடவடிக்கையில் இல்லாததைப் பற்றி "க்ளாரிபிகேஷன்" என்ன கேட்க இருக்கிறது ? விதிகளை மாற்றுவது என்றாலும், தெலுங்கு முதலிய மொழிகளுக்கு அதிக உரிமை கொடுப்பதாக இருந்தாலும், மாண்புமிகு முதல் அமைச்சரோ அல்லது ஆளும் கட்சியினரோ அம்மாதிரி விரும்புவதானால், அவர்கள் அதுபற்றி விதிக் குழுவிற்கு திருத்தம் கொண்டுவந்து, நிறைவேற்றி, அதன் பிறகு இந்தப் பேரவையில் வைத்து பேரவை ஒப்புதல் அளிக்கவேண்டும். ஆனால், இப்பொழுது இருக்கும் நிலை விளக்கமாக இருக்கிறது. தெலுங்கிலோ, மலையாளத்திலோ அல்லது வேறு மொழிகளிலோ பேச விரும்புகிறவர்கள் பேசலாம். ஆனால் அதெல்லாம் பேரவையின் நடவடிக்கைகளில் வராது. நான் தெலுங்கில் பேசியது கூட வராது. அப்படி இருக்கும்போது, அதிலே "கிளாரிபிகேஷன்" கேட்கமுடியாது.

இப்பொழுது திரு. ம. கி.பொ அவர்கள் பேசுவார்கள்.